Cr.No 20/AC/2025

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319497

1. District : மாவட்டம் Salem | PS: காவல்நிலையம் VIAC | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 20/AC/2025 | Date: நாள் 12.12.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை (1) 08.12.2025 at about 13.45 hrs.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை (2) 09.12.2025 at about 12.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.12.2025 | Time : நேரம் 18.40 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Oral Statement

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 35 km. West
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி VAO Office, Periyasoragai village Mettur taluk, Salem District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாள்/ தகவல் தந்தவர் பெயர் P. Perumal | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Perumal
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 58 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Labour | (g) Address : முகவரி D.No. 7/21 Kanakkapatti Kattu Valavu, Periyasoragai village, Mettur Taluk, Salem District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Raja, VAO, Periyasoragai village, Mettur Taluk, Salem District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளர்/ தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.

Separate Sheet enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
LTI of P. perumal

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
N. Narendran 12.12.2025

15 Date & Time of despatch to the court: 12.12.2025 at 07.40 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. Narendran
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of police
VAC, Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.20/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி..

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 11.12.2025-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 06.40 மணிக்கு சேலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திரு.P.பெருமாள், வயது 58, த.பெ. பெருமாள், கதவு எண் 7/21 கணக்கப்பட்டி காட்டு வளவு, பெரியசோரகை கிராமம், மேட்டூர் தாலுகா, சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலம் விபரம் பின்வருமாறு:- திரு.P.பெருமாள், வயது 58, த.பெ. பெருமாள், கதவு எண் 7/21 கணக்கப்பட்டி காட்டு வளவு, பெரியசோரகை கிராமம், மேட்டூர் தாலுகா, சேலம் மாவட்டம் என்பவர் 11.12.2025 ந் தேதி, வியாழக்கிழமை மாலை 06.40 மணிக்கு சேலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலம். நான் மேட்டூர் தாலுக்கா, பெரிய சோரகை கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கூலி தொழில் செய்து வருகிறேன். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியாது. எங்களது பூர்வீக சொத்து, பெரியசோரகை கிராமம் பட்டா எண் 1251-ல் சுமார் 1 ¾ ஏக்கர் நிலம் உள்ளது. அது எனது பெயரிலும், எனது தம்பி வெங்கடாஜலம் பெயரிலும் கூட்டாக உள்ளது. எனது தம்பி வெங்கடாஜலம் கடந்த 05.05.1995 ஆம் தேதி இறந்துவிட்டான். அவனுக்கு வாரிசுகள் யாரும் இல்லை. எனது மகளின் கல்யாணத்திற்காக, எங்களுக்கு சொந்தமாக இருந்த நிலத்தில் சுமார் 20 சென்ட் நிலத்தை மட்டும் விற்க முடிவு செய்து சுமார் 12 வருடங்களுக்கு முன்பு எங்க ஊரைச் சேர்ந்த திரு.அருள்முருகன் என்பவரிடம் ரூ.2,20,000/-க்கு விலை பேசி ஒப்பந்தம் செய்தேன். ஆனால் நிலத்தின் பட்டா கூட்டாக இருந்ததால், எனது தம்பி வெங்கடாஜலம் பெயரை நீக்க வேண்டும் என்று அருள்முருகன் தெரிவித்தார். அதனால், பட்டாவில் எனது தம்பி பெயரை நீக்கிய பிறகு கிரையம் செய்து கொடுத்துவிடலாம் என முடிவுசெய்திருந்தேன். ஆனால், நான் கல் கட்டும் கூலி வேலைகளுக்கு வெளியூர் சென்று வந்ததால், கிரைய ஒப்பந்தப்படி கிரையம் செய்துகொடுக்க முடியாமல் போய்விட்டது. இந்நிலையில் திரு.அருள்முருகன் அவர்கள் கிரைய ஒப்பந்தப்படி நிலத்தை உடனே எழுதிக்கொடுக்க சொன்னார். அதனால், எனது தம்பி வெங்கடாஜலம் பெயரை நீக்கி என்னுடைய பெயரில் தனி பட்டா வழங்க கேட்டு சுமார் 2 மாதத்திற்கு முன்பு மேட்டூர், வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம்கு மனு கொடுத்திருந்தேன்.

ஆனால் அந்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால், பட்டா தொடர்பாக 08.12.2025 ந் தேதியன்று மதியம் சுமார் 01.45 மணிக்கு நானும், அருள்முருகன் அவர்களும் பெரியசோரகை கிராம நிர்வாக அலுவலகம் சென்று VAO திரு.ராஜா அவர்களை நேரில் சந்தித்து பட்டாவில் உள்ள எனது தம்பி வெங்கடாஜலம் பெயரை நீக்க மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் கொடுத்த மனு பற்றி தெரிவித்து விபரம் கேட்டோம். அப்போது VAO ராஜா அவர்கள் எங்கு மனு கொடுத்தாலும் இங்கு தான் வரனும், பட்டாவில் உள்ள உங்களது தம்பி பெயரை நீக்க வேண்டும் என்றால் ஆதாரம் வேனும், அதெல்லாம் யாரும் கொடுக்கமாட்டாங்க, கோர்ட்டுக்கு போனா 10 வருஷத்துக்கு மேல ஆகும். நான் ஒரு மாதத்தில் உங்க பெயரில் பட்டா வழங்க ஏற்பாடு செய்து தருகிறேன் அதற்கு எனக்கு தனியாக ரூ 1,25,000/- கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதற்கு நான் சார் கொஞ்சம் கொரச்சு சொல்லுங்க என்று கேட்டேன். அதற்கு VAO ராஜா அவர்கள் ரூ 5,000/- கம்மி பண்ணிட்டு ரூ 1,20,000/- த்தை கொடுத்துருங்க பட்டா ரெடி பண்ணிடலாம் என்று சொன்னார். நாங்களும், சரிங்க சார் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டோம். பின்னர் மறுநாள் 09.12.2025 ந் தேதியன்று பகல் சுமார் 12.00 மணிக்கு நானும், அருள்முருகன் அவர்களும் மீண்டும் பெரியசோரகை கிராம நிர்வாக அலுவலகம் சென்று VAO திரு.ராஜா அவர்களை நேரில் சந்தித்து, பட்டாவில் எனது தம்பி பெயரை நீக்கி கொடுக்க கேட்ட பணம் ரூ 1,20,000/- ல் கொஞ்சம் கொரச்சுக்க சொல்லி கேட்டோம். அதற்கு அவர் முடியாது, ரூ 1,20,000/- மும் கொடுத்தால்தான் உங்க பெயரில் பட்ட வழங்க ஏற்பாடு செய்து தர முடியும் என கண்டிப்புடன் சொல்லிவிட்டார். அதனால் நான் அவரிடம் முன்பணமாக ரூ.20,000/- கொடுத்துவிடுகிறேன், வேலை முடிந்த பிறகு மீதி பணத்தை கொடுத்துவிடுகிறேன் என்றும் கேட்டுப்பார்த்தேன். அதற்கு VAO திரு.ராஜா அவர்கள் நான் கேட்ட பணம் ரூ.1,20,000/- மும் ரெடியான பிறகு பணத்தை மொத்தமாக கொடுங்கள். ஆன்லைனில் மனு போட்டுவிடுங்கள், பணத்தை கொண்டுவரும்போது சம்பந்தப்பட்ட டாக்குமெண்டுடன் வந்து என்னை என்றைக்கு வேண்டுமானாலும் பாத்து, நான் சொல்றமாதிரி கொடுங்க என உறுதியாக சொல்லிவிட்டார். இன்று 11.12.2025 ந் தேதி எனது பெயரில் தனி பட்டா கேட்டு ஆன்லைனில் மனு போட்டுள்ளேன். என்னால் VAO திரு.ராஜா கேட்ட பணம் ரூ 1,20,000/- த்தை இன்றுதான் ரெடி செய்யமுடிந்தது, ஆனால் எனக்கு பெரியசோரகை VAO திரு.ராஜா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எனது பெயரில் தனிப்பட்டா

பெறுவதற்கு விருப்பமில்லை. ஆகையால் பெரியசோரகை VAO திரு.ராஜா அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இன்று காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் நடந்த விபரங்களை கேட்டு கணினியில் பதிவு செய்தார். நான் கொடுத்த வாக்குமூலத்தை படித்து காண்பித்தார், நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (XXXXXX (LHTI of Tr.P.Perumal)).

Sir, Recorded the above statement in office computer on 11.12.2025 at about 07.00 Hrs. Sd xxxx (N.Narendran) 11/12/2025, Inspector of Police, V & AC, Salem.

Sir, The genuineness of the informants were verified through sources and nothing came to adverse and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.20/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 12.12.2025 at 07.00 hrs. Sd xxxx (N.Narendran) 12/12/2025, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

12.12.2025

(N.நநேந்திரன்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.